இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

www.murasoli.in
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 55 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – புரட்டாசி 18 – வெள்ளிக்கிழமை 04 அக்டோபர் 2024 – சென்னை 28 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 55 : Thiruvalluvar Year - 2055 - Purataasi 18 - Friday 04 October 2024 - Chennai 28 Pages ₹ 5.00

## முதல்வர் மு.க.ஸ்டாலினின் கோரிக்கையை ஏற்று 2-ம் கட்ட சென்னை

# மெட்ரோ ரயில் திட்டத்திற்கு ரூ. 7,425 கோடி ரூபாய் ஒதுக்கீடு!

## ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல்!

**புதுடெல்லி, அக். 4-**

**சென்னையில் 63 ஆயிரத்து 246 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மெட்ரோ ரயில் 2ம் கட்ட திட்டப்பணிகளுக்கு, 7 ஆயிரத்து 425 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிரதமர் மோடியை சந்தித்து நேரில் வலியுறுத்திய நிலையில், தொடர் முயற்சிக்கு மாபெரும் வெற்றி கிடைத்துள்ளது. இதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் நன்றி தெரிவித்துள்ளார்.**

(GFX IN) சென்னையில் 2-ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டப்பணிகள் 63ஆயிரத்து246 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 118.9 கிலோ மீட்டர் தொலைவுக்கு மூன்று வழித்தடங்களில் அமைக்கப்பட உள்ளது. இந்தத் திட்டத்தில், மாதவரம் – சிறுசேரி சிப்காட் வரை 45.8 கிலோ மீட்டர் தொலைவுக்கும், கலங்கரை விளக்கம் - பூவிருந்தவல்லி வரை 26.1 கிலோ மீட்டர் தொலைவுக்கும், மாதவரம் - சோழிங்கநல்லூர் வரை 47 கிலோ மீட்டர் தொலைவுக்கும் மூன்று வழித்தடங்களில் மெட்ரோ ரயில் திட்டப் பணிகள் நடைபெறுகின்றன.

இந்த திட்டத்திற்கு ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்யாமல் இழுத்தடித்து வந்தது. இதையடுத்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒவ்வொரு முறை பிரதமர் மோடியை சந்திக்கும்போதும், 2ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என வலியுறுத்தி வந்தார். ஆனால், தமிழ்நாட்டின் கோரிக்கையை ஏற்காமல் ஒன்றிய அரசு தொடர்ந்து மறுத்து வந்தது. ஒன்றிய நிதிநிலை அறிக்கையிலும் மெட்ரோ 2திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்படவில்லை. இதையடுத்து, கடந்த 27ஆம் தேதி டெல்லி சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பிரதமர் மோடியை சந்தித்து, சென்னை மெட்ரோ ரயில் 2ஆம் கட்ட திட்டத்திற்கு ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என நேரில் வலியுறுத்திருந்தார்.



இந்நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் தொடர் வலியுறுத்தல் காரணமாக, சென்னையில் 63ஆயிரத்து246 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மெட்ரோ ரயில் 2ம் கட்ட திட்டப்பணிகளுக்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசின் நிதி பங்களிப்பு அடிப்படையில் இந்த திட்டத்தை செயல்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக, ஒன்றிய அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பின் அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.



இதன்படி, தமிழ்நாடு அரசு 22ஆயிரத்து 228 கோடி ரூபாயும், ஒன்றிய அரசின் பங்காக 7ஆயிரத்து 425 கோடி ரூபாயும் இந்த திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்படுகிறது. எஞ்சிய 33ஆயிரத்து 593 கோடி ரூபாய் கடன்தொகையாக பெறப்பட உள்ளது. இதன் மூலம், சென்னை மெட்ரோ ரயில் 2ம் கட்ட திட்டத்துக்கு ஒன்றிய அரசின் நிதியை பெறும் தொடர் முயற்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசுக்கு மாபெரும் வெற்றி கிடைத்துள்ளது என்றே குறிப்பிடலாம்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் நன்றி!

இதற்கிடையே, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிரதமருக்கு நன்றி தெரிவித்து பதிவிட்டுள்ளார்.

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:**

**கடந்த சந்திப்பில் நான் முன்வைத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, சென்னை மெட்ரோல் இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்கு ஒப்புதல் அளித்தமைக்காக பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு நன்றி!**

**தமிழ்நாட்டு மக்களின் நெடுநாள் கோரிக்கை ஏற்கப்பட்டிருக்கும் நிலையில், சென்னை மெட்ரோ இரயிலின் இரண்டாம் கட்டத்தைக் கூடிய விரைவில் நிறைவேற்றுவோம் என உறுதியாக நம்புகிறோம்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் – பிரதமர்!

இதற்கிடையே, சென்னை மெட்ரோ இரண்டாம் கட்ட திட்டத்திற்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ள நிலையில், சென்னை மற்றும் தமிழ்நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். மெட்ரோ திட்டம் போக்குவரத்தை எளிதாக்கவும், பொருளாதார வளர்ச்சிக்கும் உதவும் என்றும் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். பரபரப்பான நகரத்தில் மக்களின் போக்குவரத்தை எளிதாக்க மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட திட்டம் உதவும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

---

## கதர் நூற்போர், நெய்வோர் வாழ்வில் உயர்வு ஏற்படுத்திட

# கதர்த் தொழிலுக்கு கை கொடுப்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, அக். 4 -**

**கதர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கதர் நூற்போர் மற்றும் நெய்வோர் அனைவருடைய வாழ்விலும் உயர்வு ஏற்படுத்திட, கதர்த் தொழிலுக்குக் கை கொடுப்போம் என உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 156வது பிறந்த நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

முதல்வர் அவர்களின் வேண்டுகோள் வருமாறு:-

**அணிந்து மகிழ்வோம் கதராடைகளை !**

**ஆதரித்து மகிழ்வோம் நெசவாளர்களை ! !**

தமிழ்நாட்டிலுள்ள கதர் நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களின் பொருளாதார மேம்பாட்டினையும், அவர்களது நலன்களையும் கருத்திலே கொண்டு கதர் கிராமத் தொழில் வாரியம் மூலமாக தமிழ்நாடு அரசு பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

இந்திய விடுதலைப் போராட்டத்தின்போது **"அகிம்சை ஆயுதமாக"** அண்ணல் காந்தியடிகள் அவர்களால் முன்மொழியப்பட்ட கதர், கைத்தறி ஆடைகளைத் தயாரிப்பது, அதையே அணிவது என்பதன் அடிப்படையில், கை இராட்டைகளைக் கொண்டு நூல் நூற்பதிலும், கதர் இரகங்களை நெசவு செய்வதிலும் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது.

கிராமப்புறங்களில் உள்ள கதர் நெசவாளர்களால் நவீன சூழலுக்கு ஏற்ப புத்தம்புது வடிவமைப்புகளில் கண்ணைக் கவரும் வண்ணத்தில் நெசவு நெய்யப்படும் கதராடைகள் மற்றும் கிராமப்புற கைவினைஞர்களால் உற்பத்தி செய்யப்படும் பலதரப்பட்ட கிராமப் பொருட்களை தமிழ்நாட்டிலுள்ள கதர் அங்காடிகள் மூலம் விற்பனை செய்திட தமிழ்நாடு அரசு தூண்டுகோலாய் துணை நின்று அனைத்து உதவிகளையும் செய்து வருகிறது.

பொதுமக்களுக்குக் குறைந்த விலையில் கதர் பருத்தி, கதர் பாலியஸ்டர் மற்றும் கதர் பட்டு இரகங்களை வழங்க வேண்டுமென்ற நோக்கில் ஆண்டு முழுவதும் 30 விழுக்காடு விற்பனைத் தள்ளுபடியை அரசு அனுமதித்துள்ளதால், ஆண்டு முழுவதும் தள்ளுபடி விலையில் அவை விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

அண்ணல் காந்தியடிகளின் 156வது பிறந்த நன்னாளையொட்டி, கதர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கதர் நூற்போர் மற்றும் நெய்வோர் அனைவருடைய வாழ்க்கையிலும் உயர்வு ஏற்படுத்தி, கதர்த் தொழிலுக்குக் கை கொடுக்கும் வகையில், தேச நலன் காக்கும் கதர் மற்றும் கிராமப் பொருட்களை அதிகளவில் வாங்கி நாட்டிற்கு வலிமை சேர்த்திட வேண்டுமென மாணவ, மாணவிகள், இளைஞர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியப் பெருமக்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 156-வது பிறந்த நாளையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் நேற்று முன்தினம் (2.10.2024) சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியக வளாகத்தில் அமைந்துள்ள உத்தமர் காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு அருகே வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ. பரந்தாமன், த.வேலு, ஜோசப் சாமுவேல், ஏ.எம்.வி.பிரபாகரராஜா, துணை மேயர் மு.மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.